**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**S.T.C. No.41/2025 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சதீஸ்குமார் | த–பெ | நல்லதம்பி |
| ஊர்: | : | மாத்தூர் | | |
| வயது: | : | 38/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026**

**எதிரி ஆஜர்.**

----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் மாத்தூரில் வசித்து ஓ வேலை செய்து வருகிறேன். இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தேவக்கோட்டை – மாத்தூருக்கு இருசக்கர வாகனத்தில் எனது மாமனார் இருசக்கர வாகனத்தில் ஆறாவயல் உஞ்சனை சாலை வழியாக வந்து கொண்டிருந்தபோது சம்பவ சாலையில் விழுந்து விட்டதாக எனது மனைவி என்னிடம் சொன்னார். நான் சிவகங்கை அரசு மருத்துவமனை சென்று மறுநாள் அவரை பார்த்தபோது அவருக்கு காலில் காயங்கள் ஏற்பட்டிருந்தது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 07.12.2023 அன்று மாலை 5.30 மணிக்கு தனது மாமனார் ஆறாவயல் – மாத்தூர் சாலையில் TN 63 V 3485 என்ற XL இருசக்கரவாகனத்தில் சம்பவ சாலையில் இடது புறத்தில் வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது எர்த்திகா காரை ஓட்டி வந்த நபர் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் வந்து தனது மாமனாரின் இருசக்கர வாகனத்தில் மோதி அதனால் அவருக்கு இடது தொடை, தலையின் பின்புறம் மற்றும் கைகளில் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டதாகவும் காயத்துடன் இருந்த தனது மாமனாரை 108 ஆம்புலன்ஸில் தேவக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு முதல் சிகிச்சைக்காக அனுமதித்து பின்னர்

மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனையில் சென்று சேர்த்ததாகவும் மேற்படி காரை ஓட்டிய நபர் ஆரோக்கிய செல்வகுமார் என்று தெரிந்து கொண்டு அசா1 அளித்த புகாருக்கு ஆதரவாக சொல்லிவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.12 10:28:37 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# S.T.C. No.41/2025 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | விஸ்வநாதன் | த–பெ | கணேசன் |
| ஊர்: | : | கோட்டையூர் | | |
| வயது: | : | 35/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | பெயிண்டர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026**

**எதிரி ஆஜர்.**

----------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

1. நான் தற்சமயம் கோட்டையூரில் வசித்து பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தேவக்கோட்டை – காரைக்குடிக்கு இருசக்கர வாகனத்தில் ஆறாவயல் உஞ்சனை சாலை வழியாக வந்து கொண்டிருந்தபோது கார் பைக்கின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக அங்கிருந்தவர்கள் எனக்கு தகவல் சொன்னார்கள். மேலும் ஆம்புலன்ஸில் எனது தகப்பனாரை தேவக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டதாக சொன்னார்கள். நான் மருத்துவமனை சென்று பார்த்தேன். பின்னர் நான் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பார்த்து கொண்டிருந்தோம். பின்னர் சிகிச்சை முடிந்து வீட்டிற்கு அழைத்து வந்தோம். உடல் நிலை சரியில்லாமல் எனது தகப்பனார் 2025 ம் வருடம் இறந்துவிட்டார். மேற்படி விபத்தை ஏற்படுத்திய காரின் ஓட்டுநர் எந்த ஊரை சார்ந்தவர் என்ற விபரம் எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 07.12.2023 அன்று மாலை 5.30 மணிக்கு தனது தகப்பனார் ஆறாவயல் – மாத்தூர் சாலையில் TN 63 V 3485 என்ற XL இருசக்கர வாகனத்தில் சம்பவ சாலையில் இடது புறத்தில் வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது எர்த்திகா காரை ஓட்டி வந்த நபர் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் வந்து தனது தகப்பனாரின் இருசக்கர வாகனத்தில் மோதி அதனால் அவருக்கு இடது தொடை, தலையின் பின்புறம் மற்றும் கைகளில் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டதாகவும் சம்பவத்தை பார்த்த நான் தம்பிக்கு செல்போனில் சொல்லிவிட்டு காயத்துடன் இருந்த தனது தகப்பனாரை 108 ஆம்புலன்ஸில்

தேவக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு முதல் சிகிச்சைக்காக அனுமதித்து பின்னர் மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனையில் சென்று சேர்த்ததாகவும் மேற்படி காரை ஓட்டிய நபர் ஆரோக்கிய செல்வகுமார் என்று தெரிந்து கொண்டு அசா1 அளித்த புகாருக்கு ஆதரவாக சொல்லிவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.12 10:28:43 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**S.T.C. No.41/2025 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பாலமுருகன் | த–பெ | கணேசன் |
| ஊர்: | : | கோட்டையூர் | | |
| வயது: | : | 31/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | போட்டோ ஸ்டுடியோ | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026**

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

1. நான் தற்சமயம் கோட்டையூரில் வசித்து போட்டோ ஸ்டுடியோ வைத்துள்ளேன். தேதி மாதம் நினைவில் இல்லை. இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது தகப்பனார் ஆறாவயலில் உள்ள எங்கள் பெரியப்பா வீட்டிற்கு XL இருசக்கர வாகனத்தில் சென்றார். பின்னர் அன்றைய தினம் இரவு 7.00 மணியளவில் எனது அண்ணன் விஸ்வநாதன் என்பவர் என்னை தொடர்பு கொண்டு ஆறாவயல் வரும்வழியில் தகப்பனார் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது கார் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டதாகவும் சிகிச்சைக்காக பின்னர் தேவக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த எனது தகப்பனாரை பார்த்தேன். பின்னர் சிவகங்கை அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு சென்று நான் பார்த்தேன். அதன் பிறகு எனது தகப்பனார் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அவரால் வெளியே நடக்க இயலவில்லை. கடந்த ஆண்டு ஜீலை மாதத்தில் எனது தகப்பனார் இறந்துவிட்டார். மேற்படி எனது தந்தையின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியவர் எந்த ஊரை சார்ந்தவர் என்ற விபரம் எனக்கு தெரியாது. இரண்டு நாட்கள் கழித்து நான் சாக்கோட்டை காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி புகார் அளித்தேன். **புகார் அசாஆ 1**.

<u>குறுக்கு விசாரணை</u>

1. புகாரை எழுதியது யார் என்றால் எனக்கு தெரியாது. புகாரிலுள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.12 10:28:48 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.